முழுப் பதிப்புரிமையுடையது.

# இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் கழகம்

## மட்டம் III பரீட்சை – 2022 சனவரி

## (303) நிதிக் கட்டுப்பாடுகளும் கணக்காய்வும்

(Financial Controls & Audit)

2022-03-19
பிற்பகல்
[01.45 – 05.00]

பக்கங்கள் : 08
வினாக்கள் : 09

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள் (தயவுசெய்து கவனமாக வாசிக்கவும்):**

(1) ***அனுமதிக்கப்பட்ட காலம் :*** *வாசிப்புக்கு* : 15 *நிமிடங்கள்*
*விடையெழுத* : 03 *மணித்தியாலங்கள்*

(2) ***சகல வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.***

(3) *வழங்கப்பட்டுள்ள* ***விடைப் புத்தகத்தில்*** *நீங்கள் விண்ணப்பித்த* ***மொழி மூலத்திலேயே விடைகள்*** *எழுதப்படல் வேண்டும்.*

(4) *சகல செய்முறைகளையும் கணிப்பீடுகளையும் சமர்ப்பிக்கவும். நீங்கள் ஏதேனும் எடுகோள்களை மேற்கொண்டிருப்பின் அவற்றைத் தெளிவாகக் குறிப்பிடவும்.*

(5) *நிரற்படுத்தப்படாத கணிப்பான்களின் பாவனை* ***மாத்திரம்*** *அனுமதிக்கப்பட்டுள்ளது.*

(6) ***செயல் வினைச் சொற்களின் செவ்வை நிரல்*** *அவற்றின்* ***வரைவிலக்கணங்களுடன்*** *இணைக்கப் பட்டுள்ளது. OTQs தவிர்ந்த ஒவ்வொரு வினாவும் ஒரு* ***செயல் வினைச் சொல்லை*** *கொண்டுள்ளது. பரீட்சார்த்திகள் செயல் வினைச் சொல் செவ்வை நிரலில் தரப்பட்டுள்ள வரைவிலக்கணங்களின் அடிப்படையில் வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.*

(7) *100 புள்ளிகள்.*

---

## பகுதி A

(மொத்தம் 20 புள்ளிகள்)

### வினா 01

நிறுவன ஆளுகை என்பது கம்பனிகளை வழிநடத்திக் கட்டுப்படுத்துகின்ற முறைமை ஆகும். ஒரு சிறந்த நிறுவன ஆளுகை முறைமையை நடைமுறைப்படுத்துவதன் மூலம், நிறுவனம் அடைந்துகொள்ளத் திட்டமிடுவதை அது எப்போதும் தொடர்புபடுத்துவதால் இது நிறுவன சூழலில் முக்கியமானதாகக் காணப்படுகிறது. முறையான அறிக்கையிடல் கட்டமைப்பொன்றுடன்கூடிய நிறுவனக் கட்டமைப்பானது நிறுவனத்தின் ஆளுகை வேலைச்சட்டகத்தின் பிரதான பாகங்களில் (components) ஒன்றாக இருக்கிறது.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) ஒரு கம்பனி சிறந்த நிறுவன ஆளுகை முறைமையைப் பின்பற்றுவதால் ஏற்படக்கூடிய மூன்று (03) அனுகூலங்களை (advantages) **இனங்காண்க.** (03 புள்ளிகள்)

(b) நிறுவனத்தின் ஆளுகை வேலைச்சட்டகத்தில் காணப்படும் நிறுவனக் கட்டமைப்பு தவிர்ந்த வேறு இரண்டு (02) பாகங்களைக் **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

## வினா 02

வணிக நிறுவனமொன்றுக்கு ஓர் ஆபத்து என்பது உண்மையான முடிவுகள் எதிர்பார்க்கப்பட்டதிலிருந்து மாறுபடும் சாத்தியம் ஆகும். வணிக இடர்கள் உள்ளக இடர்கள் (internal risks) மற்றும் வெளிவாரி இடர்கள் (external risks) எனப் பொதுவாக வகைப்படுத்தப்படுகின்றன.

**நீங்கள் செய்ய வேண்டியது :**

நிறுவனமொன்று எதிர்கொள்கின்ற இரண்டு (02) உள்ளக இடர்களை ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு உதாரணத்துடன் **விபரிக்குக.** (05 புள்ளிகள்)

## வினா 03

**வரையறுக்கப்பட்ட SJ (தனியார்) கம்பனி** ("கம்பனி") விவசாயத் துறைக்கான கூட்டுப் பசளைத் தயாரிப்பில் ஈடுபடுகிறது. கம்பனியின் முகாமையானது புதிய இயந்திரத்தில் முதலீடு செய்வதன் மூலம் கொள்ளளவை அதிகரிக்கத் தீர்மானித்து, அரச வங்கியொன்றிடமிருந்து சலுகைக் கடனொன்றைப் பெறவுள்ளது. இந்த நோக்கத்திற்காக, கம்பனியின் கணக்காளர் 5 ஆண்டுகளுக்கான எதிர்வுகூறலொன்றைத் தயாரித்து, வங்கிக்குச் சமர்ப்பித்துள்ளார். வங்கியானது அதனை சுயாதீன கணக்காய்வாளர் ஒருவரின் அபிப்பிராயத்துடன் சமர்ப்பிக்குமாறு கோரியுள்ளது.

**நீங்கள் செய்ய வேண்டியது :**

மேற்படி ஈடுபடுத்தலுக்கான உறுதிப்பாட்டு ஈடுபடுத்தலின் மூலகங்களை (elements) **தொடர்புபடுத்துக**.

(05 புள்ளிகள்)

## வினா 04

கோவிட் 19 நோய்ப் பரவல் தொடர்ந்தும் பரவிவருவதால், உமது கணக்காய்வு நிறுவனமானது கணக்காய்வுகளை நடத்தும்போது குறிப்பிட்ட செயன்முறைகளை நடைமுறைப்படுத்தத் தீர்மானித்து, இணங்கியுள்ளது. பெரும்பாலான இத்தகைய மாற்றங்கள் பயணக் கட்டுப்பாடுகள் மற்றும் தொழில்நுட்ப முன்னேற்றங்கள் காரணமாக ஏற்பட்டுள்ளன. அண்மைய கணக்காய்வுக் கூட்டத்தின்போது, தற்போதைய சூழலில் கணக்காய்வின் தரத்தைப் பேணுவதன் முக்கியத்துவம் பற்றியும் நிறுவனமானது நெறிமுறைக் கோட்பாடுகளுக்கான அர்ப்பணிப்பு, போதுமான ஆற்றல்கள் மற்றும் இயலுமைகளைக் கொண்ட நபர்களை பணிக்கமர்த்த வேண்டும் என்பது பற்றியும் ஈடுபடுத்தல் பங்காளர், கணக்காய்வு அணியிடம் வலியுறுத்தியுள்ளார்.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) கணக்காய்வு நிறுவனத்தில் பணிக்கமர்த்தப்படும் நபரின் ஆற்றல்களை விருத்தி செய்கின்ற இரண்டு (02) முறைகளை **இனங்காண்க.** (02 புள்ளிகள்)

(b) நிறுவனமொன்று தாபித்துப் பேண வேண்டிய தரக் கட்டுப்பாட்டு முறைமை ஒன்றின் மூன்று (03) மூலகங்களைக் (elements) **குறிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

*பகுதி A முடிவு*

## பகுதி B

(மொத்தம் 30 புள்ளிகள்)

### வினா 05

பட்டயக் கணக்காளர் நிறுவனமான **பெரேரா அன்ட் கோ.** இன் ஒரு சிரேட்ட கணக்காய்வாளர் நீங்கள் ஆவீர்கள். 5 நட்சத்திர ஹோட்டலான **வரையறுக்கப்பட்ட ஹப்பி (தனியார்) கம்பனியின் (HPL)** கடந்த 5 ஆண்டுகளுக்கான கணக்காய்வாளராக உங்களுடைய நிறுவனம் பணியாற்றுவதுடன் கடந்த ஆண்டிலிருந்து இந்தக் கணக்காய்வில் நீங்கள் ஈடுபடுகிறீர்கள். நீங்கள் தற்போது வரவிருக்கும் நிதியாண்டிற்கான கணக்காய்வைத் திட்டமிடுகிறீர்கள்.

திட்டமிடல் கூட்டத்தின்போது, உங்களது முகாமையாளர் கீழ்வரும் விடயங்களைத் தெரிவித்துள்ளார் :

- கம்பனியானது அதன் முகாமைப் பணிப்பாளரிடமிருந்து (MD) ரூபா 100 மில்லியனுக்கு சொகுசு அடுக்குமாடிக் குடியிருப்பு ஒன்றைக் கொள்வனவு செய்து, அதனை MD இன் மனைவியான பிரதம நிதி அதிகாரிக்கு (CFO) தங்குமிடமாக வழங்கியுள்ளது.
- கம்பனியின் சொத்துக்களை CFO முறைகேடாகப் பயன்படுத்தியதாக அண்மைக் காலங்களில் ஒரு மோசமான ஊடக விளம்பரம் காணப்பட்டது.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) "இடர் மதிப்பீட்டு நடைமுறைகள் (Risk assessment procedures)" எனும் பதத்தை **விபரிக்குக.**

(02 புள்ளிகள்)

(b) **HPL** தொடர்பில் உங்களால் ஆற்றப்படக்கூடிய மூன்று (03) இடர் மதிப்பீட்டு நடைமுறைகளைக் **குறிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(c) (i) **HPL** தொடர்பில் உங்களால் கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய மோசடி இடர் காரணிகள் (fraud risk factors) இரண்டினைக் (02) **குறிப்பிடுக.**

(02 புள்ளிகள்)

(ii) **HPL** இல் மோசடிகளைக் கண்டுபிடிப்பதற்கும் தடுப்பதற்குமான கணக்காய்வாளரின் பொறுப்பை **விபரிக்குக.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

### வினா 06

**துலானி** என்பவர் தொழில்சார் கணக்கீட்டு நிறுவனமொன்றில் தனது மட்டம் 1 பரீட்சையை நிறைவு செய்த பின்னர் **YK அசோசியேற்ஸ்** என்ற பட்டயக் கணக்காளர் நிறுவனத்தில் கணக்காய்வுச் பயிற்சியாளராக தற்போதுதான் இணைந்துள்ளார். அவர் **வரையறுக்கப்பட்ட சமன் டிரேடிங் (தனியார்) கம்பனியின் (SPL)** கணக்காய்வுக்காக ஒதுக்கப்பட்டுள்ளதுடன் அந்தக் கணக்காய்வின் கணக்காய்வு நிறைவேற்றுநராக (Audit Executive) நீங்கள் இருக்கிறீர்கள். ஆதனம், பொறி மற்றும் உபகரணம் தொடர்பான கணக்காய்வு நடைமுறைகளை ஆற்றுமாறு **துலானி** கேட்கப்பட்டுள்ளார். ஆற்ற வேண்டிய அவசியமான கணக்காய்வு நடைமுறைகள் பற்றி நீங்கள் அவளுக்கு விளக்கியுள்ளீர்கள். எவ்வாறாயினும், அவள் ஒரு சிறந்த புரிதலைப் பெற்றுக்கொள்வதற்காக, "ஏன் தொழில்சார் சந்தேகம் (professional skepticism) மற்றும் தொழில்சார் தீர்ப்புடன் (professional judgment) கணக்காய்வாளர்கள் கணக்காய்வை மேற்கொள்ள வேண்டும் எனக் கேட்டுள்ளார்.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) தொழில்சார் சந்தேகம் மற்றும் தொழில்சார் தீர்ப்பு ஆகியவற்றுக்கிடையிலான வேறுபாட்டைக் **குறிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(b) ஆதனம், பொறி மற்றும் உபகரணம் தொடர்பான இரண்டு (02) நிதிக்கூற்று வலியுறுத்தல்களை (assertions) **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(c) கணக்காய்வாளரின் ஒட்டுமொத்த நோக்கங்களை (objectives) **விபரிக்குக.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 07

பெரும்பாலான தொழில்சார் நிறுவனங்கள் தமக்கான ஒழுக்கநெறிக் கோவையினை வைத்திருக்கின்றன. தொழில்சார் நிறுவனங்களின் சகல அங்கத்தவர்களும் அந்த ஒழுக்கநெறிக் கோவைக்கு இணங்க நடப்பதற்கு தேவைப்படுத்தப்பட்டுள்ளனர். இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் கழகத்தின் (ஏஏரி ஸ்ரீலங்கா) அங்கத்தவர்கள்கூட ஏஏரி ஸ்ரீலங்காவின் ஒழுக்கநெறிக் கோவையில் வகுத்தமைக்கப் பட்டுள்ள அடிப்படைக் கோட்பாடுகளுடன் (fundamental principles) இணங்கி நடப்பது கட்டாயமான தாகும்.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) ஏஏரி ஸ்ரீலங்காவின் அங்கத்தவர்களுக்கு ஏற்புடையதான தொழில்சார் ஒழுக்கநெறியின் மூன்று (03) அடிப்படைக் கோட்பாடுகளை **விபரிக்குக.** (06 புள்ளிகள்)

(b) ஒழுக்கநெறியின் அடிப்படைக் கோட்பாடுகளுடன் இணங்கி நடப்பதில் காணப்படுகின்ற இரண்டு (02) அச்சுறுத்தல்களை ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு உதாரணத்துடன் **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

*பகுதி B முடிவு*

# பகுதி C

(மொத்தம் 50 புள்ளிகள்)

## வினா 08

**வரையறுக்கப்பட்ட AB (தனியார்) கம்பனி** ("கம்பனி") அமெரிக்கா மற்றும் இலங்கையிலுள்ள சேவை நாடுநர்களுக்கு (clients) ஆலோசனை சேவைகளை வழங்குவதில் ஈடுபட்டுள்ளது. கோவிட் 19 நோய்ப் பரவல் காரணமாக, கம்பனி தனது வணிகத்தில் வளர்ச்சியை அனுபவித்திருந்தது. கீழ்வரும் தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளன :

**வருமானம் மற்றும் காசு முகாமைத்துவம் :**

(1) தொழிற்பாட்டுப் பிரிவானது வாடிக்கையாளர் தேவைகளை இனங்காணுதல், விதிகள் மற்றும் நிபந்தனைகளுடன் உடன்படுதல், உடன்படிக்கைகளை பேணுதல், விலைப்பட்டியல்களைத் திரட்டுதல் மற்றும் சேவைகளை வழங்குதல் போன்றவற்றிற்கு பொறுப்புடையதாக இருக்கிறது. இது முகாமையாளர் (தொழிற்பாடுகள்) மற்றும் 5 நிறைவேற்று அதிகாரிகள் மூலம் வழிநடத்தப்படுகிறது. நிதிப் பிரிவானது ஒரு முகாமையாளர் (நிதி), கணக்காளர் [பொதுப் பேரேடு (GL)] மற்றும் இரண்டு உதவிக் கணக்காளர்கள் ஆகியோரைக் கொண்டுள்ளது.

(2) கம்பனியானது பொதுப் பேரேட்டுக் கணக்குகளைப் பேணுதல் மற்றும் அதன் வாடிக்கையாளர்களுக்கு மாதாந்தக் கூற்றுகளைத் தயாரித்தல் போன்ற வழமையான சேவைகளையும் கொண்டுள்ளது. நியம உடன்படிக்கைகளுடன் 100 வாடிக்கையாளர்கள் காணப்படுவதுடன் வாடிக்கையாளருடனான அந்தந்த உடன்படிக்கையின் அடிப்படையில் கம்பனியானது மாதாந்த சேவைகளை வழங்குவதற்கு உரித்துடையதாக இருப்பதுடன் வருமானமானது (விற்பனை) ஒவ்வொரு 2 மாதங்களுக்கும் ஒரு முறை ஏற்பிசைவு செய்யப்படுகிறது.

(3) சகல வாடிக்கையாளர் உடன்படிக்கைகளும் முகாமையாளர் (நிதி) இனால் கைச்சாத்திடப்படுவதுடன் அவை முகாமையாளர் (தொழிற்பாடுகள்) இன் பொறுப்பின் கீழ் ஒரு திறந்த பகுதியில் வைத்துப் பேணப்படுகின்றன. சகல விலைப்பட்டியல்களும் தொழிற்பாட்டுப் பிரிவிலுள்ள நிறைவேற்றுநர் ஒருவரால் திரட்டப்படுகின்றன. பின்னர் கம்பனியின் நிதி முறைமையிலுள்ள நாட்குறிப்பேடுகளில் இதனை இடுகையிடுகின்ற கணக்காளருக்கு (GL) இதன் நகல் (பிரதி) மின்னஞ்சல் செய்யப்படுகிறது.

(4) முகாமையாளரால் (தொழிற்பாடுகள்) ஒவ்வொரு 6 மாதங்களுக்கும் ஒரு முறை உண்மையான வருமானத்துடன் பாதீடானது ஒப்பிட்டுப் பார்க்கப்படுவதுடன், இருக்கின்ற வாடிக்கையாளர் உடன்படிக்கைகளின்படி திரட்டப்பட்ட விலைப்பட்டியல்களின் எண்ணிக்கையுடன் பொதுப் பேரேட்டில் உள்ள விலைப்பட்டியல்களின் எண்ணிக்கையை அவர் இணக்கம் செய்கிறார்.

(5) சில உள்நாட்டு வாடிக்கையாளர்கள் பிற்தேதியிடப்பட்ட காசோலைகளை வழங்குவதுடன் அவை உரிய திகதி வரும்வரை தொழிற்பாடுகள் பிரிவில் நிறைவேற்றுநர் ஒருவரால் வைத்திருக்கப்படுகிறது. அதன் பிறகு அந்தக் காசோலைகள் நிறைவேற்றுநரால் உதவிக் கணக்காளர் ஒருவருக்கு கையளிக்கப்படுகின்றன.

(6) வங்கிக் கணக்கிணக்கக் கூற்று உதவிக் கணக்காளர் ஒருவரால் நிதியாண்டின் இறுதியில் தயாரிக்கப்படுகிறது.

**IT செயன்முறை :**

ஆண்டின் காலப்பகுதியில், கம்பனியானது உள்ளகரீதியில் ஒரு புதிய விலைப்பட்டியல் முறைமையினை விருத்தி செய்து, அதனைச் சோதனை செய்யாது செயற்படுத்தியிருந்தது. இது ஒரு உள்ளகரீதியில் விருத்தி செய்யப்பட்ட மென்பொருளாக இருப்பதால், ஆவணப்படுத்தல் பேணப்படவில்லை என்பதுடன் முறைமையைத் திறப்பதற்கான (login) கடவுச்சொல் (password) ஆனது தொழிற்பாட்டுப் பிரிவிலுள்ள ஊழியர்களிடையே பகிரப்பட்டுள்ளது. IT அறையை அலுவலகத்திலுள்ள எவரும் எப்போது வேண்டுமானாலும் அணுக முடியும். சகல பிரதான தரவுகளும் (master data) உதவிக் கணக்காளர் ஒருவரால் கைமுறையாக முறைமையில் உள்ளீடு செய்யப்படுகின்றன. மாதாந்த காப்புப் பிரதிகள் (back-ups) முகாமையாளர் (நிதி) இன் அறையில் பேணப்படுகின்றன. கம்பனியானது தீச்சுவர்களைப் (firewalls) பயன்படுத்துவதில்லை.

***நீங்கள் செய்ய வேண்டியவை :***

(a) "உள்ளகக் கட்டுப்பாடு (Internal Control)" எனும் பதத்தை **வரைவிலக்கணப்படுத்துக.** (03 புள்ளிகள்)

(b) வருமானம் மற்றும் காசு முகாமைத்துவத்தில் **வரையறுக்கப்பட்ட AB (தனியார்) கம்பனியில்** காணப்படும் உள்ளகக் கட்டுப்பாட்டுப் பலவீனங்கள் ஐந்தினை (05) **இனங்காண்க.** (05 புள்ளிகள்)

(c) மேற்படி பலவீனங்களை நிவர்த்தி செய்வதற்கு அந்தப் பலவீனங்கள் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு பரிந்துரைகளைக் **குறிப்பிடுக.** (05 புள்ளிகள்)

(d) வழங்கப்பட்டுள்ள தகவல்களிலிருந்து **வரையறுக்கப்பட்ட AB (தனியார்) கம்பனியின்** IT செயன் முறையில் முறையாக வடிவமைக்கப்படாத IT பொதுக் கட்டுப்பாடுகள் (IT general controls) நான்கினை (04) ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு உதாரணத்துடன் **விபரிக்குக.** (08 புள்ளிகள்)

(e) COSO உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையில் உள்ளடக்கப்பட்டுள்ள கட்டுப்பாட்டுச் சூழலின் நான்கு (04) மூலகங்களைக் (elements) **குறிப்பிடுக.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

## வினா 09

நுகர்வுப் பொருள்கள் வர்த்தகத்தில் ஈடுபடும் **வரையறுக்கப்பட்ட ஷாம் கம்பனியின்** ("கம்பனி") 2021 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வருடாந்தக் கணக்காய்வில் ஈடுபடும் பட்டயக் கணக்காளர் நிறுவனமான **தில் அசோசியேற்ஸ்** இன் சிரேட்ட கணக்காய்வாளர் **சம்பத்** ஆவார். இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க, கம்பனி தொடர்ந்தும் இயங்குகிறது என்பதன் அடிப்படையில் முகாமையானது நிதிக் கூற்றுகளைத் தயாரித்திருக்கிறது.

கீழ்வரும் தகவல்கள் கம்பனியின் நிதி முகாமையாளரிடமிருந்து கிடைக்கப்பெற்றுள்ளன :

**நிதி நிலைக் கூற்று** *(ரூபா '000)*

| டிசெம்பர் 31 இல் | 2021 | 2020 |
|---|---:|---:|
| **நடைமுறையல்லாச் சொத்துகள் :** | | |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணம் - முன்கொணரற் பெறுமதியில் | 13,909 | 15,634 |
| **நடைமுறைச் சொத்துகள் :** | | |
| தொக்குகள் (கிரயத்தில்) | 44,493 | 40,417 |
| வியாபார வருமதிகள் | 102,284 | 94,199 |
| காசும் காசுச் சமானங்களும் | 356 | 15,368 |
| | 147,133 | 149,984 |
| **மொத்தச் சொத்துகள்** | **161,042** | **165,618** |
| **உரிமையாண்மை :** | | |
| குறிப்பிடு மூலதனம் | 21,625 | 21,625 |
| கைக்கொள் இலாபம் | (35,655) | 10,791 |
| | **(14,030)** | **32,416** |
| **நடைமுறையல்லாப் பரிப்புக்கள் :** | | |
| காலக் கடன் | 35,000 | - |
| **நடைமுறைப் பரிப்புக்கள் :** | | |
| உறவுமுறைத் தரப்பினருக்கு செலுத்த வேண்டிய தொகை | 23,378 | 24,317 |
| வியாபார சென்மதிகள் | 69,057 | 53,250 |
| செலுத்த வேண்டிய வருமான வரி | 17,757 | 17,757 |
| வங்கி மேலதிகப்பற்று | 29,880 | 37,878 |
| | 140,072 | 133,202 |
| **மொத்த உரிமையாண்மையும் பரிப்புக்களும்** | **161,042** | **165,618** |

**முற்றடக்க வருமானக் கூற்று** *(ரூபா '000)*

| டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான | 2021 | 2020 |
|---|---:|---:|
| வருமானம் | 72,970 | 141,294 |
| விற்பனைக் கிரயம் | (75,800) | (113,568) |
| **மொத்த இலாபம் / (நட்டம்)** | **(2,830)** | **27,726** |
| விநியோகச் செலவினம் | (13,361) | (32,950) |
| நிருவாகச் செலவினம் | (28,500) | (16,250) |
| நிதிச் செலவினம் | (1,755) | (1,045) |
| **வரிக்கு முன்னரான இலாபம் / (நட்டம்)** | **(46,446)** | **(22,519)** |
| வருமான வரி | - | - |
| **ஆண்டிற்கான இலாபம் / (நட்டம்)** | **(46,446)** | **(22,519)** |

**வியாபார வருமதிகளின் பட்டியல்**

| | ரூபா ('000) | காலம் |
|---|---|---|
| மில்டன் லிமிட்டெட் | 67 | 30 நாள்கள் |
| கென் (பிரை.) லிமிட்டெட் | 1,967 | 30 நாள்கள் |
| ரோய் (பிரை.) லிமிட்டெட் | 20,967 | 90 நாள்கள் |
| மெக் பி.எல்.சி. | 167 | 180 நாள்கள் |
| சம்சன் (பிரை.) லிமிட்டெட் | 45,767 | 720 நாள்கள் |
| வரை.பிராங் | 33,349 | 1,460 நாள்கள் |
| | **102,284** | |

கணக்காய்வு ஈடுபடுத்தலுடன் தொடர்புடைய கீழ்வரும் விபரங்கள் கணக்காய்வு ஆவணப்படுத்தலிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டுள்ளன :

(1) கணக்காய்வுக்குப் பொருத்தமான பொருண்மை ரூபா 1,600,000/-.

(2) கம்பனியானது ஆண்டின் காலப்பகுதியில் வங்கிக் கடனொன்றைப் பெற்றுக்கொண்டுள்ளதுடன், கம்பனி கடன் உடன்படிக்கையை மீறியுள்ளது. கடன் உடன்படிக்கையின்படி, ஏதாவது உடன்படிக்கை மீறலானது உரிமையான கோரிக்கையின் மீது (on demand) கடனைச் செலுத்த வழிவகுக்கும்.

(3) 2021 டிசெம்பர் 31 இல் காணப்பட்ட சகல இருப்புகளும் 2022 சனவரி 01 இல் ரூபா 42,800,000/- இற்கு விற்பனை செய்யப்பட்டது. இது 2021 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுகளில் சீராக்கம் செய்யப்படவில்லை.

(4) கம்பனியானது வருடாந்த தேய்மானத் தொகையான ரூபா 1,250,000/- இல் 50 % இனை மாத்திரமே இந்த ஆண்டின் காலப்பகுதியில் கணக்கிற் கொண்டிருந்தது.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) **வரையறுக்கப்பட்ட ஷாம் கம்பனியின்** கணக்காய்வு நடைமுறைகளை ஆற்றும்போது விசேட கவனம் தேவைப்படுகின்ற ஐந்து (05) பகுதிகளை (areas) **இனங்காண்க.** (05 புள்ளிகள்)

(b) கணக்காய்வு பொருண்மையைத் தீர்மானிக்கும்போது கவனத்தில் கொள்ள வேண்டிய நான்கு (04) காரணிகளைக் **குறிப்பிடுக.** (04 புள்ளிகள்)

(c) **வரையறுக்கப்பட்ட ஷாம் கம்பனியின்** நிதிக் கூற்றுகளைத் தயாரிக்கும்போது தொடர்ந்தியங்கும் என்ற எடுகோளின் பொருத்தப்பாட்டுத்தன்மை பற்றி **ஆராய்க.** (05 புள்ளிகள்)

(d) **வரையறுக்கப்பட்ட ஷாம் கம்பனியின்** 2021 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுகள் மீதான கணக்காய்வாளர் அறிக்கையின் கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு மேலே இல. (2) தொடக்கம் (4) வரையுள்ள விடயங்களின் தாக்கத்தை **மதிப்பிடுக.** (07 புள்ளிகள்)

(e) கணக்காய்வாளர், கணக்காய்வாளரின் அறிக்கையிலுள்ள கணக்காய்வாளரின் அபிப்பிராயத்தை மாற்றுகின்ற இரண்டு (02) சந்தர்ப்பங்களை (instances) **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

*பகுதி C நிறைவு*

# செயல் வினைச்சொல் செவ்வை நிரல்

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **அறிவு (1)** | விடயங்களையும் அடிப்படை எண்ணக் கருக்களையும் ஞாபகப்படுத்தல் | **வரைக (Draw)** | வரைபடம் அல்லது வரிப்படமொன்றைச் சமர்ப்பித்தல் |
| | | **தொடர்புபடுத்துக (Relate)** | தர்க்கரீதியாக அல்லது காரணரீதியாக தொடர்புகளைத் தாபித்தல் |
| | | **கூறுக/ குறிப்பிடுக(State)** | திட்டவட்டமாக அல்லது தெளிவாக விபரங்களை வெளிப்படுத்தல் |
| | | **அடையாளங்காண்க / இனங்காண்க (Identify)** | கருத்திற்கொண்ட பின்னர் ஏற்பிசைவு செய்தல், தாபித்தல் அல்லது தெரிவுசெய்தல் |
| | | **நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)** | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றன்கீழ் ஒன்றாக எழுதுதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **முற்றடக்கம் (2)** | யோசனைகள் மற்றும் தகவல்களை விபரித்தலும் தெளிவுபடுத்தலும் | **ஏற்பிசைவு செய்க (Recognize)** | அறிவு அல்லது சூழ்நிலை அனுபவத்தைப் பயன்படுத்தி செல்லுபடித்தன்மையை அல்லது அதன் இயலாமையைக் காட்டுதல் |
| | | **பொருள் விளக்குக / கருத்துக்கூறுக(Interpret)** | விளங்கக்கூடிய அல்லது பரிச்சயமான பதங்களில் தெளிவுபடுத்தல் |
| | | **விளக்குக (Describe)** | பிரதான அம்சங்களை எழுதுதலும் தொடர்பாடுதலும் |
| | | **விபரிக்குக (Explain)** | உரிய விடயங்களைப் பயன்படுத்தி தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | | **பொருள் வரையறை செய்க / வரைவிலக்கணப்படுத்துக(Define)** | சரியான தன்மை, நோக்கு அல்லது பொருளைத் தருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **பிரயோகம் (3)** | புதிய சூழ்நிலைகளில் அறிவைப் பயன்படுத்தலும் பின்பற்றலும் | **கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க(Reconcile)** | வேறொன்றுடன் ஒத்திருப்பதை / பொருந்தியிருப்பதை ஒப்புவித்தல் |
| | | **வரைக (Graph)** | வரைபுகள் மூலம் குறித்துக்காட்டுதல் |
| | | **மதிப்பிடுக (Assess)** | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | | **தீர்க்குக (Solve)** | கணிப்பீடுகள் அல்லது விளக்கங்கள் ஊடாக தீர்வைக் கண்டுபிடித்தல் |
| | | **தயாரிக்குக (Prepare)** | குறித்த நோக்கத்திற்காக உரிய முறையில் தயார்படுத்தல் |
| | | **எடுத்துக்காட்டுடன் விவரிக்குக (Demonstrate)** | உதாரணங்களுடன் நிறுவுதல் அல்லது வெளிக்காட்டல் |
| | | **கணிக்குக / கணிப்பிடுக (Calculate)** | கணிதரீதியான கணிப்பீட்டுடன் கண்டறிதல் அல்லது கணித்தல் |
| | | **பிரயோகிக்குக (Apply)** | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டுவருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **பகுப்பாய்வு (4)** | யோசனைகளுக் கிடையிலான தொடர்புகளை எழுதுதலும் பிரசினங்களைத் தீர்த்தலும் | **தொடர்பாடுக(Communicate)** | தகவல்களைப் பகிர்தல் அல்லது பரிமாறுதல் |
| | | **சுருக்கமாகக் குறிப்பிடுக(Outline)** | முக்கிய அம்சங்களின் தொகுப்பினைத் தருதல் |
| | | **வேறுபடுத்துக (Contrast)** | வேறுபாடுகளைக் காட்டுவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | **ஒப்பிடுக (Compare)** | ஒற்றுமைகளை அறிவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | **கலந்தாய்வு செய்க / ஆராய்க (Discuss)** | விவாதிப்புகள் மூலம் விபரமாக ஆய்வுசெய்தல் |
| | | **வித்தியாசப்படுத்துக / வகையிடுக (Differentiate)** | சிலவற்றை வேறுபடுத்துகின்ற வித்தியாசங்களைக் காட்டுதல் |
| | | **பகுப்பாய்வு செய்க (Analyze)** | தீர்வினை அல்லது பேறினை கண்டுபிடிப்பதற்காக விபரமாக ஆய்வுசெய்தல் |